# கொரோனா வைரஸை எண்ணி அஞ்சும் டேவ் என்கின்ற நாய்

செவிலியர் டாட்டி
தோன்றும் ஒரு புத்தகம்



ஒரு ஊரிலே, ஓர் ஆந்தையார் இருந்தார். அவருடைய பெயர் டாட்டி. அந்த ஆந்தை ஒரு செவிலியராகப் பணியாற்றினார், அவருடைய சீருடையில் பல புள்ளிகள் இருந்தன.




மலைமேலிருந்த ஒரு மருத்துவமனையில் அவர் பணிபுரிந்தார், உடல்நலம் சரியில்லாத குழந்தைகள் அனைவரையும் அவர் கவனித்துக்கொண்டார்.




டாட்டிக்குப் பக்கத்தில் டேவ் என்ற ஒரு நாயும் வாழ்ந்து வந்தார். ஒவ்வொரு நாள் காலையிலும் டேவ் டாட்டி-க்கு கையசைத்து வழியனுப்பி வைப்பார்.




ஆனால், இன்று காலை, டேவ் முகத்தில்
வழக்கமானபுன்சிரிப்பைக் காணமுடியவில்லை.
காரணம், ஒரு விஷயம் அவருக்கு மிகவும் கவலை
தந்தது.




கொரோனாவைரஸ் எங்கும் பரவிக்கொண்டிருக்கிறது என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள். இதைக் கேட்ட டேவுக்கு மிகவும் அச்சம்.



தொலைக்காட்சியில், வீட்டில், பள்ளியில்...
நாள்தோறும் எல்லோரும் இதைத்தான் பேசுகிறார்கள்.
இதனால் பெரிய பிரச்சனை ஏதும் வந்துவிடுமோ
என்று டேவ் கவலை கொண்டார்.




டேவுக்குப் பதற்றம் வந்துவிட்டது. இதைச் செவிலியர் டாட்டி கண்டார். ஆகவே, அவர் டேவுடன் அதைப்பற்றி பேசலாம் என்று தீர்மானித்தார்.



பலவிதமான அச்சுறுத்துகிற விஷயங்களை மக்கள் பேசுகிறார்கள். ஆனால், அவையெல்லாம் உண்மை இல்லை. டேவுக்கு இதுபற்றிய உண்மைகளைத் தெரியப்படுத்த விரும்பினார் செவிலியர் டாட்டி.



‘கொரோனாவைரஸ் என்ற நோய் சிலருக்கு வரலாம்,
ஆனால், அது எல்லோரையும் மிகவும் துன்புறுத்தாது’
என்று டேவுக்குச் சொன்னார் செவிலியர் டாட்டி.




குளிர் அதிகமாகும்போது சளி அல்லது ஃப்ளூ காய்ச்சல் வருகிறதல்லவா, பெரும்பாலானோருக்கு வருகிற கொரோனாவைரஸ் பிரச்சனையும் அப்படித்தான் இருக்கும். ஆனால், நாம் கவனமாக இருக்கவேண்டும், நம்மைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும், உடல்நலம் சரியில்லாதவர்களையும், முதியவர்களையும் பாதுகாக்கவேண்டும்.



‘ஒருவர் மிகவும் இருமினால் அவர்களுக்குக் கொரோனாவைரஸ் வந்துவிட்டதாகப் பொருளா?’ என்று கேட்டார் டேவ். ‘இருமுவது கொரோனாவைரஸின் அறிகுறிதான்; ஆனால், இருமுகிற எல்லோருக்கும் கொரோனாவைரஸ் வந்திருப்பதாகப் பொருள் இல்லை’ என்றார் செவிலியர் டாட்டி.



கொரோனாவைரஸ் கொண்டவர்களுக்குக் காய்ச்சல் வரலாம், மூச்சு விடுவதில் சிரமம் ஏற்படலாம், ஆனால், இவையும் சளி அல்லது ஃப்ளூ காய்ச்சலின் அறிகுறிகள்தான்.




டேவ் செய்யவேண்டிய மிக முக்கியமான வேலை, கைகளைக் கழுவுவதுதான் என்று விளக்கினார் செவிலியர் டாட்டி. அதிலும் குறிப்பாக, 20 விநாடிகளுக்காவது கை கழுவவேண்டும்; அல்லது, ‘இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்’ ஆங்கிலப் பாடலை இரண்டுமுறை பாடுகிற நேரத்துக்காவது கை கழுவவேண்டும் என்றார்.



இதனால், டேவ் தனக்குக் கொரோனாவைரஸ் வருவதைத் தடுக்கலாம்; இதன்மூலம் பிறரைப் பாதுகாக்கவும் அவர் உதவலாம்.




ஒருவேளை, டேவுக்கு உடல்நலம் சரியில்லாவிட்டால்,
அவர் வீட்டில் தங்கியிருக்கவேண்டும். ஆனால்,
அவருடைய குடும்பம் அவருடன் இருக்கும், ஆகவே,
அவர் தனியாக இருக்கமாட்டார்.




ஒருவேளை, உடல்நலம் சரியில்லாதவர்கள் பக்கத்தில் இருந்தாலும், டேவ் தன்னுடைய வீட்டில்தான் இருக்கவேண்டும். ஆனால், அவர் அதைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை, நிறையச் சாப்பிடலாம், மகிழ்ச்சியாக விளையாடலாம், மற்ற விஷயங்களைச் செய்யலாம்.



பல விஷயங்கள் ரத்து செய்யப்பட்டுவிட்டன, டேவ் விடுமுறைக்கு வெளியூர் செல்ல இயலாது, அவர் வழக்கமாகச் சந்திக்கிற நபர்களைச் சந்திக்க இயலாது, ஏனென்றால், அவர்களெல்லாம் அவரவர் வீட்டில் இருப்பார்கள்.



பொதுவாகப் பள்ளிகள், கடைகளில் பல மக்கள் ஒன்றாக கூடுவார்கள்; இந்த சமயத்தில் அது பாதுகாப்பாக இருக்காது, ஆகவே, சில பள்ளிகள், கடைகள் மூடப்பட்டுள்ளன. ஆனால், இது தாற்காலிகம்தான், விரைவில் அவை திறக்கப்படும்.




டேவுக்கு ஒரு பாட்டி இருக்கிறார். அவர் சற்று வயதானவர் என்பது டேவுக்குத் தெரியும். முதியவர்களுக்குக் கொரோனாவைரஸின் ஆபத்து கூடுதல் என்று எல்லோரும் சொல்கிறார்கள். இதை எண்ணி டேவுக்குக் கவலை.



செவிலியர் டாட்டி சொல்கிறார்: டேவ், உன்னையும் உன் சகோதரியையும் ஒப்பிடும்போது, உன் பாட்டிக்குக் கொரோனாவைரஸுடைய ஆபத்து கூடுதல்தான். ஆனால், அதற்காகத்தான் நாம் அவரை வீட்டில் இருக்கச் சொல்கிறோம். அவருக்கு என்ன வேண்டுமோ அதை நாம் கொண்டுசென்று வழங்குவோம்.



‘ஒருவேளை எனக்குக் கொரோனாவைரஸ் வந்துவிட்டால், நான் மருத்துவமனைக்கு வந்து உங்களைச் சந்திக்கவேண்டுமா?’ என்று கேட்கிறார் டேவ். ‘வேண்டியதில்லை’ என்று விளக்குகிறார் டாட்டி.



ஒருவருக்கு உடல்நலம் சரியில்லாவிட்டால், அவர் தங்குவதற்கு ஏற்ற மிகச்சிறந்த இடம், அவருடைய வீடுதான் என்கிறார் டாட்டி. ஒருவேளை, அவருக்கு ஏதாவது மருத்துவ உதவி தேவைப்பட்டால் மட்டுமே மருத்துவமனைக்கு வரலாம்.




தொலைக்காட்சியிலும் மற்ற எல்லா இடங்களிலும் மக்கள் பலவிதமான விஷயங்களைச் சொல்கிறார்கள். ஆனால், ‘யார் என்ன சொன்னாலும் சரி, கொரோனாவைரஸைச் சமாளிக்க நாம் தயாராக உள்ளோம்’ என்றார் செவிலியர் டாட்டி.



இப்போது முன்வைக்கப்படும் திட்டங்களுக்கான காரணம், அனைவரையும் பாதுகாப்பாகக் கவனித்துக்கொள்வதுதான். டேவ் செய்யவேண்டியதெல்லாம், அமைதியாக இருக்கவேண்டும், கைகளை மறக்காமல் கழுவவேண்டும்.



இப்போது, டேவுக்கு உண்மை தெரிந்துவிட்டது. அவருடைய அச்சம் ஓடிவிட்டது. தன்னை தயார்நிலையில் வைத்துக்கொள்ள என்ன செய்யவேண்டும் என்பது அவருக்குத் தெரியும்.



அவ்வப்போது கைகளைக் கழுவவேண்டும் என்று அவருக்குத் தெரியும், உடல்நிலை சரியில்லாவிட்டால் வீட்டிலேயே இருக்கவேண்டும் என்று அவருக்குத் தெரியும், எல்லாவற்றையும்விட, நம்மால் இந்த நிலையைச் சமாளிக்க இயலும் என்பதும் அவருக்குத் தெரியும்.



# © செவிலியர் டாட்டி புத்தகங்கள் 2020

கொரோனா வைரஸை எண்ணி அஞ்சும் டேவ் என்கின்ற நாய்
செவிலியர் டாட்டி தோன்றும் ஒரு புத்தகம்
எழுதியவர், படம் வரைந்தவர்: மோலி வாட்ஸ்

உரிமைகள் யாவும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்தப் புத்தகத்தை அல்லது அதன் பகுதிகளைச் ‘செவிலியர் டாட்டி புத்தகங்கள்’ நிறுவனத்தின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி இல்லாமல் எந்த வடிவத்திலும் மறுபிரதி எடுக்கக்கூடாது, எந்தவொரு மீட்கக்கூடிய அமைப்பிலும் சேமிக்கக்கூடாது, எலக்ட்ரானிக், இயந்திரவியல், புகைப்படப்பிரதி, பதிவு அல்லது வேறு எந்த வழியிலும் எந்த வடிவத்திலும் அனுப்பக்கூடாது.

மேலும் தகவல்களுக்கு அல்லது தொடர்புக்கொள்வதற்கு:
செவிலியர் டாட்டி புத்தகங்கள்
nursedottybooks@gmail.com
www.nursedottybooks.com

இந்தப் புத்தகம், பதிவுசெய்யப்பட்ட குழந்தைகள் செவிலியராக ஆசிரியருடைய அனுபவங்களின் அடிப்படையில் பணிபுரியும்படி அமைந்த ஒரு புனைக்கதைப் படைப்பாகும். பெயர்கள், பாத்திரங்கள், இடங்கள், நிகழ்வுகள் மற்றும் நிகழ்ச்சிகள் ஆசிரியருடைய கற்பனையால் விளைந்தவை அல்லது ஒரு கற்பனை முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளவை. இந்தப் புத்தகம் ஒரு கதைப் படைப்பாகச் சிந்தித்து எழுதப்பட்டது, மருத்துவ ஆலோசனை அல்லது தகவலை வழங்குவது இதன் நோக்கம் இல்லை. இந்தப் புத்தகத்தின் உள்ளடக்கத்தைப் பற்றிய தகவல்கள் எவையேனும் தேவைப்பட்டால், கண்டிப்பாக உரிய, பதிவுசெய்த மருத்துவ வல்லுனரிடம் செல்லுங்கள்.




TRANSLATION FINANCED BY WAR child